REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/Thinakaran.lk /ThinakaranLK

2021 ஜனவரி 4 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 89 இல. 03 | January 04, Monday, 2021 | 20பக்கங்கள் | 30/-


## கொழும்பில் இன்று முதல் தனிமைப்படுத்தப்பட்டிருந்த சில பகுதிகள் விடுவிப்பு



தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள சில பகுதிகளில் இன்று (04) காலை 5 மணி முதல் தனிமைப்படுத்தல் நீக்கப்படவுள்ளதாக இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா 06

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த

## உவத்தென்ன சுமன தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு



2010 ஜனாதிபதித் தேர்தலின் போது துப்பாக்கியை வைத்திருந்ததற்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட உவத்தென்ன சுமன தேரருக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தண்டனைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டை அவர் திரும்பப் பெற வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் இந்த மன்னிப்பு வழங்கப்படுகிறது.

2010 இல் அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் ஆதரவாளராக இருந்த சுமன தேரர் ரி 56 துப்பாக்கியை வைத்திருந்தமைக்காக தண்டனை விதிக்கப்பட்டது.

50 கையெறி குண்டுகள் மற்றும் 210 சுற்று வெடிமருந்துகளை வைத்திருந்ததாகவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது, 06

## பெப்ரவரி முதல் 10 அத்தியாவசிய பொருட்களுக்கு நிர்ணய விலை

**சதோச மற்றும் கூட்டுறவுக் கடைகள் ஊடாக ஏற்பாடு –பந்துல**

லோரன்ஸ் செல்வநாயகம்



அரிசி, பருப்பு, சீனி உட்பட 10 அத்தியாவசிய உணவுப் பொருட்களை எதிர்வரும் பெப்ரவரி முதல் உத்தரவாத விலையில் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கூட்டுறவு மொத்த வி... வு...

அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் உத்தரவாத விலையில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க அரிசி, பருப்பு, சீனி, கோதுமை மா,

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை;

## நல்லதொரு தீர்வு எட்டப்படுமென கலாநிதி சுரேன் ராகவன் நம்பிக்கை



தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையை பொறுத்தவரை நல்லதொரு தீர்வு எட்டப்படுமென தான் எதிர்பார்ப்பதாக வடமாகாண முன்னாள் ஆளுநரும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சுரேன் ராகவன் எமக்கு வழங்கிய பேட்டியின் போது தெரிவித்துள்ளார்.

'தமிழ் அரசியல் கைதிகள் விடயம் பற்றி நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னரும் பேசியிருக்கிறேன். வடமாகாண ஆளுநர் என்ற ரீதியில் அப்போது இருந்த அதிகாரிகளிடம் தமிழ் அரசியல் கைதிகளைப் பற்றி நான் பேசியிருக்கிறேன். இந்த விடயத்தை முக்கியமானதாகக் கருதுமாறும், அது நல்லிணக்க நடைமுறையை பலப்படுத்தும் என்றும் நான் கூறியிருக்கின்றேன். இது தொடர்பாக நாம் ஒரு நல்ல முடிவை எட்டவிருந்த 06




தொழில் மற்றும் இதர தேவைகளுக்காக செ...

## வெளிநாடுகளிலிருந்... வரும் நடவடிக்கை மதாடரும

**தடையின்றி தொடர்ந்து முன்னெடுக்கப்படும் - வெளிவிவகார அமைச்சு**

லோரன்ஸ் செல்வநாயகம்

வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புகளுக்காக சென்று கொரோனா வைரஸ் சூழ்நிலையில் மீண்டும் இலங்கை திரும்ப எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் 68,000 இலங்கையர்களை அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் தடையின்றி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க இந்த வாரத்தில் இந்தியா, குவைத், டொரொண்டோ சைப்ரஸ் உள்ளிட்ட நாடுகளில் இருந்து 1,400 பேரை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் இதுவரை 137 நாடுகளில் அவ்வாறு நெருக்கடிக்கு உள்ளாகியிருந்த 60 ஆயி

**நாடு திரும்பும் எதிர்பார்ப்புடன் 68,000 இலங்கையர் காத்திருப்பு**



ரத்து 470 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் மேலும் 68,000 பேர் காத்திருப்பதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்;

இதுவரை 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ள நிலையில் மேலும் 68,000 06

## ...லாந்து கிரிக்கெட் அணி ... இலங்கை வந்தடைந்தது

**...ன் பரிசோதனையில் எவருக்கும் தொற்றில்லை**



லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கையில் நடைபெறவுள்ள இரண்டு கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் நேற்று இலங்கை வந்தடைந்தனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி வீரர்கள் உள்ளிட்ட 44 பேர் இவ்வாறு நேற்று மதியம் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்ததாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர்களுக்கு விமான நிலையத்தில் வைத்து என்ரிஜன் பரிசோதனை 06

நீதிமன்ற விசாரணைகளுக்கு முன்னதான ஏற்பாடு;

## முன் விசாரணை 'பதிவு நீதிபதி' புதிய நிர்வாக நிலை உருவாக்கம்



நீதிமன்ற விசாரணைகளுக்கு முன்னதாக ஒரு முன் விசாரணைக்காக "பதிவு நீதிபதி" என்று அழைக்கப்படும் புதிய நிர்வாக நிலையை உருவாக்க நீதி அமைச்சு முடிவு செய்துள்ளது.

இந்த நிலை தற்போதுள்ள நீதிமன்ற பதிவாளர் பதவிக்கு உயர்ந்ததாக இருக்கும். அத்துடன் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வரப்படும்.

"பதிவு நீதிபதி" என்ற நிலை அனைத்து நீதிமன்றங்களிலும் உருவாக்கப்படும்.

இந்த நிலையில் இந்த பதவிக்கு அதிகாரங்களை வழங்குவதற்காக நீதித்துறை சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்று நீதியமைச்சின் செயலாளர் பியுமந்தி பீரிஸ் தெரிவித்துள்ளார். வழக்குகளை விசாரிப்பதற்கான நிர்வாக ஏற்பாடுகளைச் 06

ஜனாஸாக்களை அடக்கம் செய்வது தொடர்பாக

## சமூக வலைத்தளங்களில் வெளிவரும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை

**சரியான விளக்கத்தின் பின் அறிவிப்பு என்கிறது பிரதமர் அலுவலகம்**

கொவிட்19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்யலாம் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகும் செய்தி முற்றிலும் பொய்யானது என பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கொவிட்19 வைரஸ் தாக்கத்



தினால் உயிரிழப்பவர்களின் இறுதிக் கிரியைகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட இரண்டு குழுவினர் தங்களின் ஆய்வு அறிக்கைகளைப் பிரதமரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

ஆனால் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இதுவரையில் தெளிவுபடுத்தப்படவில்லை.

கொவிட்19 வைரஸ் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களின் உடலை 06

## தமிழ் கட்சிகளுடனேயே மாகாண சபை தேர்தலில் சந்திப்பேன் என்கிறார் கருணா



தமிழ்க் கட்சிகளுடனேயே மாகாண சபை தேர்தலை சந்திப்பேன். தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைய தயாராக உள்ளதாகவும் முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், எமது கட்சியான தமிழர் ஐக்கிய சுதந்திர 06

## அரசியலமைப்பில் அரசு பாசாங்கு செய்வதாக சி.வி குற்றச்சாட்டு

**நிபுணர் குழுவிற்கு விரிவாக கடிதம் அனுப்பிவைப்பு**



பெரும்பான்மை சமூகத்தினருக்கு சார்பான அரசியல் யாப்பு வரைபை ஏற்கனவே தயாரித்துவிட்டு, பொது

அது தொடர்பில் அரசியல் யாப்பை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவிற்கு தமிழ்

இரும்பு உருக்கும் பட்டறையில்

## கொதிகலன் வெடித்து இந்திய பிரஜை பலி; இருவருக்கு காயம்



கொட்டதெனிய கரபொட்டுவாவ பிரதேசத்திலுள்ள இரும்பு உருக்கும் பட்டறையின் கொதிகலன் ஒன்று வெடித்ததில் ஒருவர் உயிரிழந்து மேலும் இருவர் காயமடைந்துள்ளனர் என, கொட்டதெனிய

## தனியார் வகுப்புகளுக்கு விரைவில் அனுமதி வரும்

**டாக்டர் சுதத் சமரவீர தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்பட்ட பின்னர், தனியார் கல்வி வகுப்புகளை மீண்டும் தொடங்க திட்டங்கள் தற்போது வகுக்கப்